இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 24.05.2026

# பொருளாதாரத்தில் மந்தம்!

நிகழாண்டு இந்தியப் பொருளாதார வளர்ச்சியைக் குறைத்துள்ளது ஐ.நா. இது இந்தியப் பொருளாதாரத்தின் மந்தநிலைமையை உணர்த்துகிறது.

நிகழாண்டு இந்தியப் பொருளாதார வளர்ச்சி 6.4 விழுக்காடாக இருக்கும் என்று ஐ.நா. கணித்துள்ளது. இந்தியப் பொருளாதார வளர்ச்சி 6.6 விழுக்காடாக இருக்கும் என்று முன்பு அறிவிக்கப்பட்டதில் இருந்து குறைக்கப்பட்டு உள்ளது.

ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்க – ஈரான் மோதலால் ஏற்பட்டுள்ள மேற்காசிய நெருக்கடி, உலகப் பொருளாதாரத்துக்கு மற்றுமொரு அதிர்ச்சியை அளித்துள்ளது. இது வளர்ச்சியை மந்தமாக்கி, பணவீக்கத்தின் அழுத்தத்தை மீண்டும் உருவாக்கி, நிச்சயமற்ற தன்மையை மேலும் அதிகரிக்கும்." என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

**கடந்த ஆண்டு இந்தியப் பொருளாதார வளர்ச்சி 7.5 விழுக்காடாக இருந்தது. 6.6 விழுக்காடாக இந்த ஆண்டு இருக்கும் என்று கணித்தது ஐ.நா. அதையும் இப்போது குறைத்து 6.4 விழுக்காடாக ஆக்கிக் கொண்டு விட்டது. இது இந்தியப் பொருளாதாரத்தின் சரிவைக் காட்டுகிறது.**

"மேற்காசியப் போரால் தற்போதைக்கு கவலைப்படும் சூழல் இல்லை" என்று ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் சொல்லி இருக்கிறார். அப்படியானால் எது உண்மை? கவலைப்படும் சூழல் இல்லை என்பது உண்மையானால், ஐ.நா.வின் கணிப்பு என்பது பொய்யா?

**மாண்புமிகு பிரதமர் அவர்கள், "தங்கம் வாங்கி வைக்காதீர்கள், வெளிநாடு போகாதீர்கள், வீட்டுக்குள் இருந்து பணியாற்றுங்கள், இயற்கை விவசாயத்துக்கு மாறுங்கள், பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டைக் குறையுங்கள்" என்று சொல்கிறார். ஆனால் அவரது அமைச்சரவையில் இருக்கும் ஒரு அமைச்சர், 'மேற்காசியப் போரால் கவலைப்படும் சூழல் இல்லை' என்கிறார். எது உண்மை? போருக்குத் தொடர்பு இல்லாத கட்டுப்பாடுகளை விதிக்கிறாரா பிரதமர்? அல்லது உண்மையை மறைக்கிறாரா ஒன்றிய அமைச்சர்?**

இந்தப் பொருளாதார மந்தத்துக்கு போர் மட்டும்தான் காரணமா? வேறு காரணங்கள் எதுவும் இல்லையா?

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்காக இதுவரை செய்யப்பட்ட சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள் பயன் அளிக்காமல் போனது ஏன்?

**இந்தியப் பொருளாதாரத்தை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில் பிரதமர் நரேந்திர மோடியால் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது தான் 'மேக் இன் இந்தியா' திட்டம். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உற்பத்தித் தரத்தை உயர்த்துதல், உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், நவீன உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வெளிநாட்டு முதலீடுகளை அதிகமாக ஈர்த்தல், வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவை இந்தத் திட்டத்தின் அடிப்படைகள் ஆகும். 27 முக்கியமான துறைகளில் இத்திட்டம் கவனம் செலுத்தும் என்று சொல்லப்பட்டது.**

**இந்தியாவை அனைத்து வகைகளிலும் தன்னிறைவு கொண்ட நாடாக மாற்றுவதுதான் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம். 12 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதனை முறையாகச் செய்து இருந்தால் இப்போதைய பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்காது அல்லவா?**

2022 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தித் துறையின் பங்கை 25 விழுக்காடு ஆக உயர்த்த இலக்கு வைக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அது 15 விழுக்காட்டில்தான் இருக்கிறது. இலக்கு என்பது எட்டப்படவில்லை.

இலக்காகச் சொல்லப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை என்று சொன்னார் பிரதமர். அவரது மிகமுக்கியமான ஐந்து வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. அதை அவர் நிறைவேற்றவில்லை.

2025ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டை உற்பத்தித் துறையில் ஈர்க்கப் போவதாகச் சொல்லப்பட்டது. 23 பில்லியன் டாலரைத்தான் எட்ட முடிந்தது. இலக்குகளுக்கும் உண்மைகளுக்குமான இடைவெளி மிகமிக அதிகமாக இருக்கிறது.

உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசால் முடியவில்லை. பெரும்பாலான உற்பத்தி பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதனை 'அசெம்பிள்' செய்யும் இடமாகவே இந்தியா இருக்கிறது. அதனால்தான் 'மேக் இன் இந்தியா' திட்டத்தை, 'அசெம்பிள் இன் இந்தியா' திட்டம் என்று கிண்டலடிக்கிறார்கள்.

சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவில்லை. ஒன்றிய அரசின் அதிகப்படியான வரிகள், இத்தொழில்களை முடக்கி வருகிறது.

**இந்தியப் பொருளாதாரத்தையே சீர்திருத்தம் செய்யப் போகிறோம் என்று சொல்லி 500,1000 ரூபாய் நோட்டுகளை ஒழித்தார்கள். இந்தியாவில் நடக்கும் பொருளாதார சுதந்திரப் போராட்டமாக இது சொல்லப்பட்டது. இந்தியாவுக்கு இன்னொரு விடுதலை நாளாக இதனைப் பலரும் பீற்றிக் கொண்டார்கள். 2000 ரூபாய் நோட்டு அறிமுகம் ஆனது. பின்னர் அதையும் ஒழித்தார்கள். கருப்புப் பணத்தை ஒழிக்கப் போவதாகச் சொல்லப்பட்டது.**

**எவ்வளவு அச்சடிக்கப்பட்டு இருந்ததோ அது ரிசர்வ் வங்கிக்கு திரும்பி விட்டது. அப்படியானால் கருப்புப் பணம் எங்கே? ஏதுமில்லை. புழக்கத்தில் விடப்பட்ட நோட்டுகளில் 99 விழுக்காடு ரிசர்வ் வங்கிக்கு திரும்பி விட்டது என்றால் எதற்காக ரூபாய் நோட்டுகளை வைத்து இப்படி ஒரு ஆட்டம் ஆடினார்கள்? வெறும் திசை திருப்பலுக்கு மட்டுமே இது பயன்பட்டுள்ளது.**

பொருளாதாரத்தில் இதுவரை செய்யப்பட்டது அனைத்தும் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் தந்திரங்களாக மட்டுமே முடிந்துள்ளன என்பதைத்தான் ஐ.நா.வின் விழுக்காடு குறைப்பு உணர்த்துகிறது.





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (22.5.2026), காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மே 10 அன்று இந்தோ – நேபாள் சிலம்பம் போட்டிக்கு தேர்வு பெற்று, நேபாளில் உள்ள ரங்கசாலா போக்ரா என்ற இடத்தில் நடைபெற்ற சர்வதேச சிலம்ப விளையாட்டுப் போட்டியில் 29 தங்கப் பதக்கங்கள் மற்றும் overall சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னை மாவட்ட மாணவ, மாணவிகள் அரும்பாக்கத்தைச் சேர்ந்த சிலம்பம் மாஸ்டர் ஆர்.கார்த்திக் தலைமையில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### தி.மு.கழக ஆட்சியில் தோழமையாய் இருந்து வென்றெடுத்ததை நினைவுகூர்கிறேன்!

## கோரிக்கைகளை அரசாணைகளாக மாற்றிய அண்ணன் மு.க.ஸ்டாலினுக்கு இதயம் நிறைந்த நன்றிகள்!

### வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் பதிவு!

**சென்னை, மே 24-**

**தி.மு.கழக ஆட்சியில் தோழமைக் கட்சியாய் இருந்து சட்டமன்றத்தில் வென்றெடுத்த அம்சங்களை நன்றியுடன் நினைவு கூர்வதாகவும், தங்களது கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்று அவற்றை அரசாணையாக மாற்றிய அன்றைய முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது: –

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் முதல் தமிழக அமைச்சராக அதுவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கும் அன்பு இளவல் பெருமதிப்பிற்குரிய தோழர் வன்னியரசுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

அர்ப்பணிப்பும் ஆளுமையும் கண்ணியமான தோழமைப்பண்பும் நிறைந்தவர். சாதிய எதிர்ப்புக்களத்தில் காயங்களையும் ரணங்களையும் சுமந்தவர். தலைவரின் நம்பிக்கைக்குரிய முன்னணித் தளபதி தோழர் வன்னியரசு அவர்கள். அவரும் அவரது இணையரும் கட்சிக்கும் தலைமைக்கும் ஆற்றியப்பணிகள் எந்நாளும் நன்றிக்குரியன. தகுதியானவருக்கு அமைச்சர் பதவியை பரிந்துரைத்த தலைவருக்கு நன்றி.

#### தி.மு.க. ஆட்சியில் நாம் பெற்ற பயன்!

இந்தத் தருணத்தில் இந்தத் துறை சார்ந்தும் நம் மக்களின் வாழ்வையும் கண்ணியத்தையும் மேம்படுத்தவும் கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தோழமைக்கட்சியாய் இருந்து சட்டமன்றத்தில் பணியாற்றிட நம் தலைவரும் மக்களும் தந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் நால்வருமாய் சேர்ந்து வென்றெடுத்த அம்சங்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எமது கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்று அவற்றை அரசாணைகளாக மாற்றிய மேனாள் முதல்வர் அண்ணன் ஸ்டாலின் அவர்கட்கு எனது இதயம் நிறைந்த நன்றியை இந்த தருணத்திலும் மனப்பூர்வமாக பதிவிடுகிறேன்.



தேர்தல் தோல்வியின் போதுகூட கலங்காத என் மனம் இதை எழுதும் போது நன்றியால் கரைகிறது. இந்த நன்றியை பதிவு செய்வது என் அரசியல் வாழ்வின் குறைந்த பட்ச அறம் என நம்புகிறேன். தலைவர் திருமாவிடம் கற்று உறுதி செய்துகொண்ட பாடம் எனவும் நம்புகிறேன்.

இந்த சாதனைகளில் நினைவில் இருக்கும் சிலவற்றை மட்டும் பதிவிடுகிறேன்.

#### சாதனைகளின் பட்டியல்!

யாருமே இதை அங்கீகரிக்காமல் போனாலும், பாராட்ட மனமின்றி கடந்து போனாலும் , மாறாக காழ்ப்புணர்ச்சியில் என் மீது அவதூறுகளை அள்ளி வீசினாலும் இந்தச்சாதனைகளை கள்ளங்கபடமற்ற விடுதலைச் சிறுத்தைகளின் காலடிக்கு சமர்ப்பிக்கிறேன். இந்தத் தலைமுறை தியாகத்தலைமுறையாக இருக்கட்டும் என தலைவர் விடுத்த அறை கூவலை ஏற்று எதிர்பார்ப்பு ஏதுமின்றி தம் வாழ்வையே அர்ப்பணித்த எண்ணற்ற தோழர்களுக்கு இது சமர்பணம்.

இந்த சாதனைகளை பலமடங்கு விஞ்சக்கூடிய வகையில் தோழர் வன்னியரசு பணியாற்றி வரலாறு படைப்பார் என உறுதியாக நம்புகிறேன்.

தூய்மையான உள்ளத்தோடு வாழ்த்தி மகிழ்கிறேன்.

கடந்த 2021 26 கால கட்டத்தில் மேற்க்கொள்ளப்பட்ட எமது முயற்சிகளும் , சாதனைகளும். . . . .

#### எஸ்.சி – எஸ்.டி, ஆணையம்!

எமது ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு தேசிய ஆணையம் இருப்பதை போல The Tamilnadu State Commission for the Scheduled Castes and Scheduled Tribes Act 2021 எனும் சட்டம் இயற்றப்பட்டு 22.09.2021 அன்று தமிழ்நாடு SC/ST மாநில ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

அரசின் அனைத்து திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கங்களில் SC/ST பிரிவினருக்கு உரிய விகிதாச்சார ஒதுக்கீடு கிடைப்பதை சட்டப்பூர்வமாய் உறுதி செய்திட (சிறப்பு உட்கூறு திட்டம்) SC/ST Development Action Plan Act 2024 எனும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் எஸ்சி எஸ்டி பிரிவினருக்கு ஒன்றிய அரசு 3% முன்னுரிமை வழங்குவதை போல தமிழகத்தில் அரசு ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் 5% முன்னுரிமை வழங்கும் வகையில் Tender Transparency Act ல் திருத்தம் (Amendment) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### தொழில் முனைவோருக்கு வங்கிக் கடன்!

SC/ST பிரிவை சார்ந்த தொழில் முனைவோர் வங்கி கடனில் 35 % முன் ஒப்பளிப்பு மானியம் (Front end Subsidy) பெறும் வகையில் (அதிகபட்சம் 1.5 கோடி ) ஆண்டுக்கு 200 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.

சர்வதேச பல்கலைக்கழகங்களில் நம் மாணவர்கள் பயில 36 லட்சம் முதல் 24 லட்சம் வரை உதவித் தொகை வழங்கும் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவி திட்டம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

#### அயோத்திதாசர் குடியிருப்பு – மேம்பாடு!

பட்டியல் வகுப்பார் குடியிருப்புகளில் இதுவரை நிறைவேற்றப்படாமல் உள்ள அடிப்படை வசதிகளை உருவாக்கிட ஆண்டுக்கு 200 கோடி ஒதுக்கீட்டில் அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டமும், பழங்குடியினருக்கு தொல் குடிகள் குடியிருப்பு மேம்பாட்டு திட்டமும் உருவாக்கப்பட்டு நடைமுறைபடுத்தப் பட்டு வருகின்றன.

மூன்றில் ஒரு பங்கு பொதுமக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் நமக்கு நாமே திட்டத்தில் பட்டியல் வகுப்பார் பழங்குடியினருக்கு மக்கள் பங்களிப்பு அய்ந்தில் ஒரு பங்கு என குறைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் ஈரோடு மாவட்டங்களில் 30 ஆண்டுகளாய் முடங்கி கிடந்த ஈங்கூர் மற்றும் முதலிப்பாளையம் தாட்கோ தொழிற்பேட்டைகள் 200 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடி சமூகங்களைச்சார்ந்த தொழில்முனைவோர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சிந்தனைச் செல்வன் கழக ஆட்சியில் பெற்ற நன்மைகளைப் பட்டியலிட்டுள்ளார்.

## "நமது கால்கள் ஒருபோதும் நடையை நிறுத்தாது!"

### – சிந்தனைச் செல்வன் பதிவையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதி!